DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**STC.No.111/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | முத்துகிருஷ்ணன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ராதாகிருஷ்ணன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2025

எதிரி ஆஜரில்லை. சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், மாயனூரில் குடியிருந்து டீக்கடை வைத்துள்ளேன். 13.11.2018 காலை 07.00 மணியிருக்கும் நானும் நாகராஜ் என்பவரும் டோல்பிளாசாவிலிருந்து கரூர் நோக்கி செல்லும் போது கட்டளை ரெங்கநாதபுரம் பாலம் அருகில் மாயனூா போலிசார் படம் வரைந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் என்ன வரைகிறிர்கள் என்று கேட்டோம். அனுமதியின்றி பாலச்சுவரில் விளம்பரம் செய்தததாக புகார் வந்து வழக்கு போட்டு அதற்காக படம் வரைவதாக சொன்னார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். இரண்டாவது கையொப்பம் நாகராஜ் என்பவருடையதுதான். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலிசார் படம் வரைந்தததற்காக கையொப்பம் செய்து கொடுத்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பில்  குறுக்கு விசாரணை:</u>**

1. நான் டீக்கடை வைப்பதற்கு முன்பு  மணவாசி டோல்பிளாசாவில் ரோந்து பணி அலுவலராக பணி செய்து வந்தேன் என்றால் சரிதான்.  அ.சா.1, திருமூர்த்தி, அ.சா.2 குணசேகரன் எனக்கு உயர் அதிகாரிகளா என்றால் ஒரே பதவியை உடையவர்கள்.  போலிசார் கொடுத்த பேப்பரில கையொப்பம் மட்டும் செய்தேன் என்றாலும் என்ன எழுதியிருந்ததது என்று தெரியாது என்றாலும் சரிதான். போலிசார் என்னிடம் கையொப்பம் மட்டும் வாங்கி கொண்டு அனுப்பி வைத்துவிட்டார்கள் வேறு எந்த விவரமும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.  நான் அந்த இடத்திற்கு சென்று பார்த்து கையொப்பம் செய்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.26 15:59:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.